2013 மே 8]

மாற்றுச் சாலை அமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இருப்பதனால், மாற்றுச் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அதனடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எதிர்காலத்திலே பரிசீலிக்கும் எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 432, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

432—

விருந்தினர் மாளிகையைச் சீரமைத்தல்

6366*—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கடையக்குடியில் "ஹோால்ஸ் ஓர்த்" அணைக்கட்டிலுள்ள விருந்தினர் மாளிகை மற்றும் பூங்காவைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருமயம் தொகுதி, கடையக்குடியில் "ஹோால்ஸ் ஓர்த்" அணைக்கட்டில் தங்கும் விடுதி மற்றும் பூங்காவைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். திருமயம்

தொகுதி, கடையக்குடியில் "ஹோல்ஸ் ஓர்த்" அணைக்கட்டில் தங்கும் விடுதியை மறுகட்டுமானம் செய்தல் மற்றும் பூங்காவினைப் புதுப்பித்து மேம்பாடு செய்தல் போன்ற பணிகளுக்காக ரூ.30.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலை ஆதாய சூதாட்டமாக்கி, அபகரிப்பு, ஆக்கிரமிப்பு என்றெல்லாம் அட்டூழியம் புரிந்த, அக்கிரமக் கும்பலின் கொட்டம் அடக்கி, எத்தர்களுக்கு எதிர்க்கட்சி இருக்கையும் இல்லை என்னும் வரலாற்றுப் புரட்சியை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) வல்லமைகளின் குவியலே! இலட்சத்திற்கும் மேலான பாமரத் தொண்டர்களுக்கும் பச்சை மையால் கையெழுத்திடும் பாக்கியம் தந்திட்ட பாசப் பெட்டகமே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பொது வாழ்க்கையின் புனிதம் காத்திட்ட போராளியே! நாளைய பாரதத்தை வழிநடத்தக் காத்திருக்கும் நாடு போற்றும் நற்றமிழே! நாங்கள் வணங்கும் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, கடையக்குடியில் "ஹோல்ஸ் ஓர்த்" அணைக்கட்டில் உள்ள விருந்தினர் மாளிகை மற்றும் பூங்காவைச் சீரமைக்க நிதியொதுக்கீடு செய்து, பணி நடைபெறும் என்ற நல்ல அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்433, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*